முருகப்பெருமான் துணை

**மகான் இடைக்காடர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**25.12.2023**, திங்கட்கிழமை

1. மாதரும ராஜனே அரங்கா
மண்ணுலகினை மீட்க வந்த
மேதகு ஞான வள்ளலே
மகானே ஞான தேசிகனே
2. தேசிகனே உன்பெருமை கூறி
தெரிவிப்பேன் துல்லிய ஆசி
ஆசிதனை சோபகிருது சிலைதிங்கள்
அருளவே நவதிகதி சோமவாரம்
(சோபகிருது வருடம் மார்கழி மாதம் 09 ம் நாள், 25.12.2023, திங்கட்கிழமை)
3. வாரமதில் இடைக்காடர் யானும்
வழங்குவேன் உலகநலம்பெற
ஆறுமுகப் பெருமான் வழிபாடு
அகிலம் எங்கும் நடந்தேற
4. நடந்தேற சரவணச் சுடரேற்றி
ஞானம் அருளும் அரங்கனை
தடையற அகிலமக்கள் ஏற்று
தரணியில் வணங்கி ஆசி பெற்று
5. ஆசிபெற்று முருகா அரங்கா என
அனுதினமும் சுடரேற்றி பூசை
நேசமுடன் செய்து வருகவே
நித்ய பூசைபலன் தருமபலனாக
6. தருமபலனாக மாறி இனிதே
தன்னார்வத் தொண்டும் ஆகி
கருமவினை வெல்லும் வழியை
கண்டுத் தேறி உயருவர்

7. உயர்வைத் தரும் ஞானி அரங்கன்
உண்மைபலம் ஜீவத் தயவே
தயவை பெருக்க வந்தாலே போதும்
தரணியில் சமூக மாற்றமாக

8. ஆகவே அற்புதம் கண்டு
அரங்கன் சீடர் பெருமக்கள்
செகத்தை மாற்றும் சக்திகளாக
சித்திமிகு ஞானிகள் ஆவர்

9. ஆகவே தமிழகம் தொட்டு
அகிலமதில் இந்தியா முழுக்க
மிகையான சக்தி பெருகிட
மேலான முருகப் பெருமான் ஆசிபட

10. ஆசிபட ஞானத் தலைமையும்
ஆட்சிமுறை ஞான வழியுமாக மாறும்
வாசிவென்ற ஞானிகள் எல்லாம்
வலம்வர ஓங்கார குடிலிலிருந்து

11. இருந்து ஞான ஒளி எங்கும் பரவி
இணையிலா ஞான ஆட்சி மலரும்
அருந்தவசி அவதார நோக்கம்
அரங்கேறி அற்புதம் காணும்
துல்லிய ஆசி முற்றே

–சுபம்–